சதாசிவனின் மாண்புகளையும்,
சதாசிவனின் சக்திகளையும்
விழிப்பிக்க வைக்கும்

# ‘சுத்த அத்வைதம்’

எனும் தியான முகாமை

(மே 4 - 24, 2016)

வாழும் அவதார புருஷர்

**பரமஹம்ஸ நித்யானந்தர்**

கும்பமேளாவில் நிகழ்த்துகிறார்.

21 நாட்கள் நடைபெறும் இத்தியானமுகாமில்...

# 70 விதமான

## ஆன்மிக சக்திகளை

**விழிப்படையச் செய்வதற்கான**

**70 தியான தீட்சைகள் மற்றும்**

**ஆசிர்வாதங்களை** பரமஹம்ஸர் அளிக்கிறார்.

உணவும், தங்கும் இடமும் இலவசம்.

## மகத்தான ஆன்மிக அனுபவம் பெற வாருங்கள்!!!

உலகிலே அதிக மக்கள் ஒன்றுகூடி கொண்டாடிடும் ஒரே விழா கும்பமேளா.

சனாதன இந்து தர்மம்...
தன்னையே வெளிப்படுத்தும் விழா ‘கும்பமேளா’.

சனாதன தர்மம், தன்னுடைய கம்பீரத்தையும், ஆற்றலையும், மகத்துவத்தையும் காலத்திற்கு அப்பாற்பட்ட தன் பவித்திரத்தையும் உவகையுடன் ‘கும்பமேளா’வில் நம் ஒவ்வொருவரின் வழியாகயும் வெளிப்படுத்துகிறாள்.

சனாதன இந்து தர்மத்தை வாழும் அனைவருமே....
சனாதன இந்து தர்மத்தின் வாரிசுகளே!!
சனாதன இந்து தர்மத்தின் வாழும் வாரிசுகளான நாம் அனைவரும் ஒன்றுகூடி கொண்டாடி, கும்பமேளாவின் மகத்துவத்தில் மகிழ்ந்திடுவோம்.

சனாதன இந்து தர்மத்தால் உன்னத நிலையை அடைந்த நாம் ஒவ்வொருவரும் கும்பமேளாவில் பங்குபெற்று, நம்மை ஈன்றவளின் மகிமையை பூமியில் உறுதி செய்வோம்.

விரும்பும் கொள்கைகளை கடைபிடிப்பதற்கும்,
விரும்பும் தெய்வத்தை வணங்குவதற்கும்,
விருப்பம் மாறும்பொழுது கொள்கைகளையும்

தெய்வத்தையுமே மாற்றுவதற்கு முழு சுதந்திரம் அளித்த நம் தர்மத்தின் பரந்த மனப்பான்மையை பறைசாற்றுவோம்.

நம் பாரம்பரியத்தை போற்றி பயிற்சி செய்யும் பக்தர்களுக்கு மேலான நம்பிக்கையையும் உத்சாகத்தையும் வழங்கி, அவர்கள் தொடர்ந்து தர்மத்தில் வாழ்ந்திட உறுதுணையாக இருப்போம்.

உலகத்திலேயே மிக அதிக அளவில் மக்கள் ஒன்றுகூடும் திருவிழாவான 'கும்பமேளா'விற்கு வருகை தரும் அனைவருக்கும் ஆழமான ஆன்மிக அனுபவம் நிகழும்.

கும்பமேளா - மனித குலத்தின் கர்மங்களை கரைக்கும்.
இந்த சிம்ஹஸ்த கும்பமேளா மனித குலத்திற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம். சிம்ஹஸ்த கும்பமேளாவில் குரு உச்சத்தில் இருக்கிறார். கும்பமேளாவில் குருவின் அருளால், உங்கள் வாழ்வே உச்சத்திற்கு செல்லும்.

உலகின் மிக மகிழ்ச்சியான மக்களாம் இந்துக்களால் கொண்டாடப்படும் உலகின் முத்த விழாவான கும்பமேளாவின் அனைத்து பயன்களையும் பெற, உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

இந்து தர்மத்தின் வாழும் வாரிசுகளான உங்கள் அனைவரையும்...
உஜ்ஜயினில் நிகழும் சிம்ஹஸ்த கும்பமேளாவிற்கு அன்போடு அழைக்கின்றோம்.

நன்றி!!!

# மனித விழிப்புணர்வில் மாற்றத்தை நிகழ்த்தும் தெய்வ நிகழ்வு ‘கும்பமேளா’

ஜென்ம ஜென்மாய் சேர்த்த கர்மவினைகளை
கரைக்க விரும்புபவர்களுக்கு...
குருவருள் பொழியும் இந்த சிம்ஹஸ்த கும்பமேளா
ஒரு உன்னதமான பரிசு என்றே சொல்லவேண்டும்.

கும்பமேளாவிற்கு வரும் பல கோடிக்கணக்கான
மக்களின் அன்பும், பிரார்த்தனையும், நன்றியுணர்வும்...
நதியில் சக்தியாக சங்கமிக்கும்.

சக்தி வாய்ந்த புனித நதியில் சாஹி ஸ்நானம் செய்யும்போது,
நதியின் தெய்விக சக்தி
நம் கர்ம வினைகளையும், குறைவுணர்வுகளையும் நீக்கி,
மன அமைதியையும், மங்களத்துவத்தையும் அருள்கிறது.

இந்து மதத்தின் மூத்த அமைப்பான
மஹாநிர்வாணி அகடாவின் மஹாமண்டலேஸ்வரரான
பரமஹம்ஸ நித்யானந்தரின் பரிவாரங்களுடன்,
‘ஷிப்ரா’ நதியில் இரண்டுமுறை
**‘சாஹி ஸ்நானம்’** செய்யும் வாய்ப்பு பெறுங்கள்.

நித்யானந்த பீடத்துடன் இணைந்து கும்பமேளாவிற்கு
வருகை தரும் கோடிக்கணக்கான சாது பெருமக்களுக்கும்,
பக்தர்களுக்கும் அன்னதானம் செய்து,
புண்ணியம் பெறும் பாக்கியத்தையும் பெறுங்கள்.